# பரிசுத்த ஆவியானவர் எவ்விதம் மனம் மாற்றுகின்றார்?

*பாவியொருவரின் மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர் எவ்விதம் செயல்படுகின்றார் என்ற கேள்வியானது பொதுவாகவே தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு ஆராய்வற்ற மாயத் தோற்றத்தினால் மூடி மறைக்கப் படுகின்றது. பரிசுத்த ஆவியானவர் ஒருவர் இருக்கின்றாரா இல்லையா என்பதோ, அல்லது அவர் செயல்படுகின்றாரா இல்லையா என்பதோ பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டைப் பற்றிய குழப்பமாயிருப்ப தில்லை. வழக்கமாக இந்தக் கருத்துக்களில் உடன்பாடு இருப்பதுண்டு.*

*பாவிக்கு அவர் செய்வதென்ன என்பது பற்றிய விவாதம் அவசியமாயிருப்பதில்லை; அவர் குற்றத்தை உணர்த்தி, விசுவாசத்தை ஏற்படுத்தி மற்றும் வழிநடத்துகின்றார் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். இவைகளை அவர் எவ்விதம் செய்கின்றார் என்பதே இங்கு உண்மையான கேள்வியாகும்.*

*இரண்டு கருத்துக்கள் முன்மொழியப்பட்டுள்ளன: ஒன்று, அவர் உடனடியாகவும் அற்புதமாகவும் செயல்படுகின்றார்; மற்றொன்று அவர் தேவனுடைய வசனம் என்ற ஊடகத்தின் வழியாகச் செயல்படுகின்றார். இந்தப் பாடக் கருத்தைப் பற்றி நாம் கலந்துரையாடுகையில், எது உண்மை நிலை என்பது தெளிவாகும்.*

## *ஆவியானவர் யார்?*

*பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களில் ஒருவராவார் என்பதே முதலாவதாகத் தெளிவு படுத்தப்பட வேண்டிய உண்மையாகும். ஆதியாகமத்தில் உலகப் பொருட்களின் படைப்பில் அவர் குறிப்பிடப் படுகின்றார் (ஆதி. 1:2). அத்துடன், மத்தேயு 28:19 மற்றும் 1 யோவான் 5:7 போன்ற வசனப் பகுதிகளில் தேவனோடும் கிறிஸ்துவோடும் அவர் குறிப்பிடப்படுகின்றார்.*

*ஆவியானவரைக் குறிப்பிடுவதற்கு நபரைக் குறிக்கும் பெயர்ச்*

சொற்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன (யோவா. 14:16, 17, 26). நபர்த்துவத்தின் பண்புகள் அவருக்குக் குறிப்பிடப்படுகின்றன. அவர் போதிக்கின்றார் (லூக். 12:12; யோவா. 14:26), பேசுகின்றார் (எபி. 3:7; 1 தீமோ. 4:1), மற்றும் அறிகின்றார் (1 கொரி. 2:11). அவர் வேண்டுதல் செய்கின்றார் (ரோமர் 8:26) மற்றும் துக்கப்படுத்தப்படக் கூடியவராய் இருக்கின்றார் (எபே. 4:30).

பரிசுத்த ஆவியானவர் புத்திக் கூர்மையுள்ள ஒரு நபர் என்றும், ஆவி போன்ற உருவம் மட்டுமல்ல என்றும் நாம் புரிந்து கொள்ளும் பொழுது, அவரது செயல்பாட்டின் விதமானது அதிகம் தெளிவாகின்றது. புத்தி கூர்மையுள்ள ஒரு மனிதர் இன்னொரு மனிதரிடத்தில் தன் செல்வாக்கைச் செலுத்துவது போலவே அதே வழிமுறையிலேயே அவர் மக்களின்மேல் தம் செல்வாக்கைச் செலுத்துகின்றார்.

## அப்போஸ்தலர்களின் காலத்தில் மனமாற்றம்

பரிசுத்த ஆவியானவர் செயல்படும் விதத்தைத் தீர்மானிப்பதற்குச் சிறந்த வழி, அப்போஸ்தலர்களின் காலத்தில் மனமாற்றத்தில் அவரது பங்கை ஆராய்வதேயாகும். நடபடிகளின் புத்தகமானது மனமாற்றங்களின் புத்தகமாய் உள்ளது. இந்தப் புத்தகத்திலிருந்து மனமாற்றத்தின் இரண்டு நிகழ்ச்சிகளை எடுத்துக் கொண்டு, அவை ஒவ்வொன்றிலும் ஆவியானவர் எவ்விதம் செயல்பட்டார் என்று கவனிப்போம்.

ஆவியானவர், குற்றத்தை உணர்த்துதல் மற்றும் மனம் மாற்றுதல் என்ற தமது ஊழியத்தைத் தொடங்க வந்த நாளை அப். 2 பதிவு செய்துள்ளது. அந்த ஒரு நாளில் அவரால் மூவாயிரம் ஆத்துமாக்கள் மாறுதல் அடைந்தார்கள். சுவிசேஷத்தைக் கேட்ட அவர்களிடத்தில் ஆவியானவர் எவ்விதம் செயல்பட்டார்? பேதுரு பேசிய வார்த்தைகளினால் மட்டுமே அது நடைபெற்றது என்று காணப்பட முடியும். ஆவியானவர் கொடுத்த வாக்கின்படியே அவர் பேசினார் (மத். 10:20).

எத்தியோப்பிய மந்திரியின் வரலாறானது அப். 8ல் கூறப்படுகின்றது. நிச்சயமாக, அவர் உண்மையிலேயே மனமாற்றப்பட்டார், ஆனால் அவர் ஆவியானவரால் மனம் மாற்றப்பட்டாரா? ஆம் என்று அனைவருமே ஒப்புக் கொள்வார்கள். என்றால், ஆவியானவர் எப்படி அவரை மாற்றினார்? மேம்போக்காக வாசித்தால் கூட, ஆவியானவரால் வழி நடத்தப்பட்டுப் பேசிய பிலிப்புவின் போதனையின் மூலமாகவே அது நடைபெற்றது என்பது வெளிப்படுத்தப்படும்.

ஆவியானவர் வார்த்தைகளுக்குப் புறம்பே அல்ல, ஆனால் வார்த்தை/ வசனங்களின் மூலமாகவே செயல்பட்டார் என்பதை இந்த நிகழ்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. ஏவப்பட்ட மனிதர்கள் பிரசங்கித்ததை மக்கள் கேட்ட பொழுது, ஆவியானவருக்கே அவர்கள் செவி கொடுத்தார்கள். இந்த வசனங்களினால் அவர்கள் மனம் மாற்றப்பட்ட பொழுது, அவர்கள் ஆவியானவராலேயே மனம் மாற்றப்பட்டார்கள். அவர்கள் கேட்டதைப்

புறக்கணித்த போது, ஆவியானவரையே அவர்கள் எதிர்த்து நின்றார்கள் (அப். 7:51, 52; நெகே. 9:30). ஸ்தேவான் தமது போதனையைப் புறக்கணித்தவர்களை பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நின்றார்கள் என்று குற்றம் சாட்டினார் (அப். 7:51).

## இன்றைய நாட்களில் ஆவியானவர் மக்களை எவ்விதம் மனம் மாற்றுகின்றார்?

மனமாற்றத்தில் ஆவியானவர் அப்போஸ்தலர்களின் காலத்தின் போது செய்ததையே இன்றைய நாட்களிலும் செய்கின்றாரா? ஆம். இன்றைய நாட்களில் நாம் உயிர் வாழும் ஏவப்பட்ட மனிதர்களைப் பெற்றிருக்கின்றோமா? இல்லை. அற்புதங்களின் காலம் ஒழிந்து போயிற்று. இருந்தாலும், அவர்களின் பேச்சுக்களின் மூலம் மட்டுமே ஆவியானவர் அவர்களை வழிநடத்தாமல், அவர்களின் எழுத்துக்களிலும் அவர்களை அவர் வழிநடத்தினார். இவ்விதமாக, இன்றைய நாட்களில் நம்மிடம் ‘‘பேசுவதற்கு’’ நாம் ஏவப்பட்ட அவர்களின் வசனங்களைப் பெற்றிருக்கின்றோம். வேதவசனங்கள் யாவும் ஆவியானவருடைய வார்த்தைகளாய் இருக்கின்றன.

ஆவியானவரைக் குறிப்பிடுகின்ற பழைய ஏற்பாட்டின் மேற்கோள் ஒன்று எபி. 3:7ல் உள்ளது. 2 பேது. 1:20, 21 வசனப் பகுதிகள், பரிசுத்த மனிதர்களின் தீர்க்கதரிசனங்கள் பரிசுத்த ஆவியானவரால் வந்தன என்று கூறுகின்றன. அது போலவே, 2 தீமோ. 3:16 வசனப் பகுதியும் கூட வேதவசனங்களின் ஏவுதலை உரிமை கோருகின்றது. வெளி. 2 மற்றும் 3ல் ஆவியானவர் பேசுவதைச் சபைகள் கேட்க வேண்டும் என்று யோவான் புத்தி கூறுகின்றார். யோவான் எழுதிய செய்தியைக் கவனிப்பதினால் அவர்கள் இதைச் செய்ய வேண்டும்.

ஆவியானவரும் வசனமும் தங்களுக்கு பெரும்பாலும் ஒரே விதமான செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் இப்பொழுது காண்கின்றோம். இவ்விரண்டுமே ஜீவனைக் கொடுப்பதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. (யோவா. 6:63), புதிய பிறப்பைக் கொடுப்பது (யோவா. 3:5; 1 பேது. 1:23) மற்றும் பரிசுத்தப்படுத்துவது (1 கொரி. 6:11; யோவா. 17:17).

எடுத்துக்காட்டாக, பரிசுத்தப்படுத்துதலை நாம் கவனித்து, அது எவ்விதம் நமது கேள்வியைத் தெளிவு படுத்துகின்றது என்று காண்போம். நாம் ஆவியினாலும் வசனத்தினாலும் பரிசுத்தப் படுத்தப்படுகின்றோம். ஆவியானவர் வார்த்தையினாலே பரிசுத்தப்படுத்துகின்றார். ஆவியானவர் ஒரு நபராக இருக்கின்றார்; வசனமானது ஒரு கருவியாக இருக்கின்றது. அது ஆவியின் பட்டயமாக இருக்கின்றது (எபே. 6:17). ஒரு மனிதர் கோடாரியின் உதவியினால் மரத்தை வெட்டி வீழ்த்துகின்றார். இந்தப் பணியில் இருவருக்குமே ஒரு பங்கு இருக்கின்றது, ஆனால் அம்மனிதர் அக்கருவியின் மூலமாக அந்த வேலையைச் செய்கின்றார். ஆவியானவர் தமது பட்டயத்தினாலேயே செயல்படுகின்றார், அது இன்றி அவர் செயல்படுவதில்லை.

# முடிவுரை

*ஆவியானவரைப் பற்றி வேதாகமம் போதிக்கின்ற ஒவ்வொன்றையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பாவி ஒருவரின் இருதயத்தில் அவர் எவ்விதம் செயல்படுகின்றார்? அவர் தம் வசனத்தின் மூலமாகவே செயல்படுகின்றார். அவர் அற்புதமான/புரியாத ஏதோ ஒரு வழியில் செயல்படுவதில்லை. அவரது போதனையை நாம் ஏற்றுக் கொண்டு, கீழ்ப்படியும் போது நாம் ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றோம். அவரால் வழிநடத்தப்படுகின்றவர்கள் தேவனுடைய பிள்ளைகள் ஆகின்றார்கள் (ரோமர் 8:14); நீங்கள் ஆவியானவரை ஏற்றுக் கொள்கின்றீர்களா அல்லது அவரை எதிர்த்து நிற்கின்றீர்களா?*